## தலையங்கம்




**26.07.2023 புதன்**

## நடவடிக்கை

குட்கா முறைகேடு வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா உள்ளிட்டவர்களுக்கு எதிரான வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்குத் தமிழ்நாடு ஆளுநரிடமிருந்து அனுமதி கிடைக்காததால், அந்த வழக்கு சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் 11ஆவது முறையாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இது விமர்சனங்களுக்கு வழிவகுத்திருக்கிறது.

சென்னையில் குட்கா, பான் மசாலா நிறுவன குடோன்களில், வருமான வரித் துறை 2017இல் நடத்திய சோதனையில் நாள்குறிப்பு உள்பட முக்கிய ஆவணங்கள் சிக்கின. தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்ட குட்கா, பான் மசாலா போன்ற பொருள்களை சென்னையில் விற்பனை செய்வதற்கு உதவியதற்குப் பணம் கைமாறியதும் அந்த நாள்குறிப்பு மூலம் வெளிச்சத்துக்கு வந்தது. இந்த வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மட்டுமல்லாமல், ஓய்வுபெற்ற காவல் துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் மீதும் குற்றம்சாட்டப்பட்டது. இதையடுத்து, சிபிஐ விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் 2018இல் உத்தரவிட்டது.

**IndoStar Home Finance Private Limited** INDOSTAR

**Regd. Office: -** Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093

**CIN :** U65990MH2016PTC271587 **Tel:** +91 22 45107701

**Email:** contact@indostarhfc.com; **Website:** www.indostarhfc.com

**அறிவிப்பு**

முதன்மை திசை- வங்கி சாரா நிதி நிறுவனம் - ஹவுசிங் ஃபைனான்ஸ் கம்பெனி (ரிசர்வ் வங்கி) திசைகள், 2021 இன் பத்தி 93-ன்படி, GVR வளாகம், முதல் தளம், எண். 6-A லாசன்ஸ் ரோடு, கண்டோன்மென்ட், திருச்சியில் அமைந்துள்ள நிறுவனத்தின் கிளை அலுவலகம் அக்டோபர் 20-ம் தேதி முதல் 6200000000 வரை செயல்படும். 1வது தளம், 90, MDSR என்கிளேவ், பாரதிதாசன் சாலை, கண்டோன்மென்ட், திருச்சி, தமிழ்நாடு- 620001 இல் அமைந்துள்ள அருகிலுள்ள கிளை அலுவலகத்திற்கு மாற்றப்படுகிறது. ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகிலுள்ள கிளை அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது contact@indostarhfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
Sd/-
நிதி சதானி
நிறுவனத்தின் செயலாளர்

தேதி : 25.07.2023

## பொது அறிவிப்பு

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் பி & எஸ் பி கிளை இராஜா அண்ணாமலைபுரம் ஆனது எண் 84, கீரின் வேஸ் ரோடு இராஜா அண்ணாமலைபுரம் (கிழக்கு) சென்னை -600028 என்ற முகவரியில் இயங்கி வரும் வங்கியின் கிளை மேலாளர் என்ற முறையில் V. அனீஷ் கிருஷ்ணன் ஆகிய நான் அளிக்கும் பொது அறிவிப்பு என்னெவென்றால். திரு. M. ரமேஷ் & திருமதி B. ராதா என்பவருக்கு சொந்தமான அசல் ஆவண எண் 5987/2011 என்ற ஆவண எண்ணாக செங்கல்பட்டு இணை II சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணத்தை அடமானம் நிமித்தமாக மேற்சொன்ன எங்கள் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியின் பி & எஸ் பி கிளையின்

பாதுகாப்பிலிருந்து தொலைந்து எங்கு தேடியும் கண்டுபிடிக்க இயலவில்லை எனவே இதன் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால் எந்த நபரானாலும் மேற்சொன்ன அசல் ஆவணம் கிடைக்கப் பெற்றாலோ அல்லது காண நேர்ந்தாலோ உடனடியாக இந்த அறிவிப்பால் தெரிவிக்கப் பட்டுள்ள எங்கள் வங்கி கிளையின் முகவரிக்கோ அல்லது 8848253471 என்ற தொலை பேசி எண்ணிற்கோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

V.அனீஷ் கிருஷ்ணன்
கிளை மேலாளர்
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
பி & எஸ் பி கிளை இராஜா அண்ணாமலைபுரம்
எண் 84, கீரின் வேஸ் ரோடு
இராஜா அண்ணாமலைபுரம் (கிழக்கு)
சென்னை -600028
Mob. 8848253471



## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக மாவட்ட தலைநகரில் மாபெரும் பேரணி நடைபெற்றது

ஈரோடு,ஜுலை,26

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக ஈரோடு காளைமாடு சிலை அருகில் தமிழக முதல்வரின் கவன ஈர்ப்பு மாவட்ட தலைநகரில் மாபெரும் பேரணி நடைபெற்றது.

இப்பேரணியில் சிபிஎஸ் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வதில்லை திட்டத்தை அமல்படுத்த வேண்டும், தமிழக அரசின் காலை சிற்றுண்டி திட்டத்தை சத்துணவு ஊழியர்கள் மூலமாக செயல்படுத்த வேண்டும், இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசாணை 115 ஐ ரத்து செய்யவிட வேண்டும் போன்ற ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து பேரணி நடைபெற்றது.

ராக்கி முத்து மாவட்ட தலைவர் அவர்கள் தலைமை வகித்தார், ச.விஜய மனோகரன் மாவட்ட செயலாளர் விளக்க உரை ஆற்றினார், மாநிலத் துணைத்தலைவர் குமரேசன் இப்பேரணி துவக்கி வைத்தார் மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பொது அறிவிப்பு

இதன்மூலம்பொதுமக்களுக்குஅறிவிப்பது என்னவென்றால் வரதராஜபுரம்கிராமம் ஸ்ரீபெரம்பத்துர் தாலுகா தற்போதுகுன்றத்தூர் தாலுகா மனைஎண். 515ராயப்பாநகர்செங்கல்பட்டுமாவட்டம் தற்போதுகாஞ்சிபுரம்மாவட்டத்தில் அமைந்துள்ள புல எண்.270/2அடங்கிய 3400சதுர அடிகொண்டமனை எனது கட்சிக்காரர்விற்பனை செய்துள்ளார் மேலும் என்னுடைய கட்சிக்காரரின் விற்பனையாளர்கள் கிழே குறிப்பிடப்பட்டுள்ளஇரண்டு மூலபாத்திரத்தை தொலைத்து விட்டார்கள்அவைகிழே குறிப்பிடப்பட்டுள்ள 1.கடந்த23.03.1973 அன்றுதாம்பரம்சார்பதிவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன கிரையஆவணஎண். 997/1973 2.கடந்த30.08.1990 அன்றுதாம்பரம் சார்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளகிரையஆவணஎண்.4493/1990 மேய்க்குரியசொத்தின்மீதுஎதேனும்நபர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளஅசல் பாத்திரத்தை வைத்துள்ளவர்கள் மேலும் அந்தஅசல்பத்திரத்தின் மூலம் இச்சொத்தை பொறுத்துஉரிமைகொண்டாடுபவர்கள்அல்லதுஉரிமைடைட்டில்அல்லது உரிமை கோரிக்கை அல்லதுஅக்கறை கொண்டிருக்கிற அல்லது கொண்டிருப்பதாகஉரிமைகோருகிற அனைத்து நபர்கள் மற்றும்நிறுவனங்கள்கீழேகையப்ப மிட்டநபருக்கு இது குறித்துஆவணரீதியானசான்றோடு எழுத்துப் பூர்வமான இந்தஅறிவிப்புவெளியான தேதிலிருந்து ஏழுநாட்களுக்குள்ஏதேனும்ஆட்சபனை இருப்பின் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது குறிப்பிட்ட தேதிக்குபிறகுபெறப்படும்அனைத்து ஆட்சபனைகள்மற்றும் உரிமைகோரிக்கைகளைக் ஏற்றுக்கொள்ளப்படாது

இப்படிக்கு
சி.கே.வெங்கடேஷ்
வழக்கறிஞர்

IN THE COURT OF THE HON'BLE I- ADDITIONAL DISTRICT MUNSIF AT PONDICHERRY
O.S. No: 848 OF 2023.

Sumathi ...Plaintiff

Vs.

1. Sendil Kumar
2. The Sub-Registrar,Etat-Civil Section Puducherry Municipality Pondicherry ...Defendants

PUBLIC NOTICE

It is hereby informed to the general public that the suit by the aforesaid plaintiff to declare that the plaintiff's name as SANKAR NITHISH and to declare the plaintiff's father name as SANKAR PANDOURANGAME and to declare the plaintiff's mother name as SANKAR SUMATHI and to grant a mandatory injunction directing the second defendant i.e the Registrar, Registration of birth and deaths, Puducherry Municipality, Pondicherry to correct the plaintiff's name as SANKAR NITHISH instead of NITHISH and to correct the name of father is SANKAR PANDOURANGAME instead of SANKAR and to correct the name of mother is SANKAR SUMATHI instead of SUMATHI in the birth certificate of the plaintiff son (SANKAR NITHISH) which is registered before the Office of the second defendant and maintained by the second defendant under Registration No: PM/M/1999/014305 and other reliefs. It is posted 24-08-2023 for the objections from the public if any. If anybody is having any objections in the aforesaid sit they can appear before the said court and file their objections in person or through their pleader, failing which the suit will be decided on merits by the said court.

A. Syed Ahamed Mohideen, B.A. LLB
Advocate, Puducherry.
Counsel for the plaintiff

## நிலத்தை அபகரித்தவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி கலெக்டர் அலுவலகம் முன்பு விவசாயி குடும்பத்தோடு போராட்டம்-பரபரப்பு



திருவண்ணாமலை, ஜுலை. 26

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அடுத்த மேல் வணக்கம் பாடிய சேர்ந்தவர் சுந்தரேசன். விவசாயி, இவரது மனைவி செண்பகவள்ளி. இவர்களுக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர். இந்நிலையில் செண்பகவள்ளியின் தாய் வழி பாட்டனார் சொத்தில் 18 சென்ட் இடத்தை செண்பகவள்ளிக்கு கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் செண்பகவள்ளியின் மூத்தார் மகன் அந்த இடத்தை முறைகேடாக பத்திரம் செய்து வேறு ஒரு நபருக்கு விற்றுள்ளார்.

இந்த விவரம் பின்னர் செண்பகவள்ளி தரப்பிற்கு தெரிய வருகிறது. இடத்திற்கான ஆவணங்கள் தங்களிடம் உள்ள போது, எப்படி இந்த இடத்தை வேறு ஒரு நபர் வாங்கினார் என்று விசாரித்த போது வருவாய்துறையினர் இதற்கு உடந்தையாக இருந்தது தெரிய வருகிறது. இந்நிலையில் முறைகேடாக பட்டா வழங்கியது ரத்து செய்ய கோரி செண்பகவள்ளி தரப்பினர் கலெக்டர் அலுவலகத்தில் பலமுறை மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

இதனால் குடும்பத்துடன் தற்கொலைக்கு இவர்கள் முயன்றுள்ளனர். இந்நிலையில் தங்கள் இடத்தை மீட்டுத் தரக் கோரி திருவண்ணாமலை கலெக்டர் அலுவலக போர்டிகோ அருகே கணவன் மனைவி மற்றும் மகன் ஆகியோர் திடீர் தர்ணாவில் ஈடுபட்டனர். மேலும் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை வருவாய்த்துறை அதிகாரியிடம் அழைத்து சென்றனர். இந்த சம்பவம் திருவண்ணாமலையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



தமிழக பாரதிய ஜனதா கட்சி சிறுபான்மையினர் அணி தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் கடலூருக்கு வருகை தந்த போது கடலூர் கிழக்கு மாவட்ட கடலூர் மாநகரத் தலைவர் வேலு வெங்கடேசன் தலைமையில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் மணி இந்திரஜித், செந்தில் மற்றும சிறுபான்மை அணி மாநில செயலாளர் பிரவீன் குமார். பாஜக மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன், சிறுபான்மை அணி மாவட்ட தலைவர் ஜே. நிஷா, மாவட்ட பொது செயலாளர் அக்பர் ,பொருளாளர் முத்துமாரியம்மன்,. மாவட்ட செயலாளர் கிரிஸ்டோபர்,. மாவட்டத்துணைத் தலைவர் மரிய பிரகாசம், மாவட்டத்துணைத் தலைவர் பிரின்ஸ் பாபு,விளையாட்டு மேம்பாட்டு பிரிவு மாவட்ட தலைவர் பிரவீன் குமார் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.










